# வானவில்

VAANAVIL
ISSUE – 7 JULY 2011

இதழ் - 7 ஆடி 2011


# இலங்கை அரசாங்கம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி, இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வுகாண வேண்டும்!




இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் கடந்த 60 வருடங்களாக பல மலைகளில் ஏறி இறங்கி, எண்ணற்ற குத்துக்கரணங்கள் அடித்து, இப்பொழுது 'பாராளுமன்றத் தெரிவுக்குழு' என்ற தரிப்பிடத்தில் வந்து நிற்கின்றது. இது இறுதித் தரிப்பிடமா அல்லது இன்னொரு தங்குமடமா என்பதை இப்போதைக்கு எவராலும் கூற முடியாவிட்டாலும், இந்தத் தெரிவுக்குழு விவகாரம் தமிழ் பேசும் மக்களின் மனங்களில் புதிய நம்பிக்கை எதையும் ஊட்டவில்லை என்பது மட்டும் நிச்சயம்.

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது, ஒரு காலத்தில் அதைத் தனது காலனித்துவப் பிடிக்குள் வைத்திருந்த, இன்றும் அதைத் தொடர்ந்தும் மிரட்டி வரும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால், அவர்களது 'பிரித்தாளும்' சூழ்ச்சிக் கொள்கையின் விளைவாக உருவானதென்றாலும், சுதந்திரத்துக்குப் பின்னர் அதற்கு இனவாத எண்ணெய் ஊற்றி வளர்த்தெடுத்ததில், தமிழ் - சிங்கள முதலாளித்துவ அரசியல்வாதிகளுக்கும் கணிசமான பங்கு உண்டென்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழர் தரப்பிலிருந்து தமிழ் காங்கிரசின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையில் தொடங்கி, தமிழரசுக்கட்சியின் சமஸ்டிக் கோரிக்கையூடாகப் பயணித்து, பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'தமிழீழத் தனிநாடு' பிரகடனத்தில் பிரவேசித்து, அதற்காக 30 வருடப் போரையும் நடாத்தி, தமிழ் மக்களுக்கு இருந்த அரைகுறை உரிமைகளையும் இல்லாதொழித்து, இப்பொழுது தமிழ் மக்கள் கையறுந்த நிலையில், பாராளுமன்ற தெரிவுக்குழு என்ற நங்கூரத்தில் பிணைக்கப்பட்டு நிற்கின்றனர்.

ஆனால் இன்னமும் கூட இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நம்பிக்கையான அறிகுறிகள் எதனையும் காண முடியவில்லை. அரசாங்கம் இந்தப் பிரச்சினையை தான் எவ்வாறு தீர்க்கப் போகின்றது என்று எதுவும் கூறாமல் தயக்கம் காட்டி வருகிறது. தமிழர் தரப்பில் இன்று பிரதான கட்சியாக இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்போ, தமிழ் மக்கள் சார்பாக என்ன தீர்வை தாம் முன்வைக்கிறோம் என்று வெளிப்படையாக எதுவும் சொல்லாமல் 'கண்ணாமூச்சி' விளையாடி வருகிறது. எதிர்க்கட்சிகளான ஐ.தே.க, ஜே.வி.பி என்பன தமிழ் மக்கள் மீது அக்கறைப்படுபவர்கள் போல் காட்டிக்கொண்டு, அரசாங்கம் ஏதாவது ஒரு சிறு நகர்வை மேற்கொண்டாலும், அது வெளிநாட்டுச் சதி என்று சன்னதம் ஆடி வருகின்றன.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# 1983 ஜூலை வன்செயல் நினைவாக

**வானவில்**

இலங்கையில் 1983 ஜூலை வன்செயல்கள் நடைபெற்று, இம்மாதத்துடன் 28 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்த 28 ஆண்டுகளில் தமிழ் மக்கள் வாழ்விலும் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்து முடிந்துள்ளன.

உலக வரலாறு எத்தனையோ விடுதலைப் போராட்டங்களைக் கண்டிருக்கிறது. அடிமைத்தனத்துக்கு எதிரான போர், அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போர், நிறப்பாகுபாட்டுக்கு எதிரான போர், வர்க்க விடுதலைக்கான போர் என அவை நீண்டு செல்கின்றன.

பெரும்பாலும் இந்தப் போராட்டங்கள் யாவும், இறுதியில் வெற்றியையே தழுவிக் கொண்டுள்ளன. அதற்குக் காரணம் அந்தப் போராட்டங்களில் இருந்த தார்மீகரீதியான நியாயப்பாடுதான். உதாரணமாக, சின்னஞ்சிறிய வியட்நாம் நாட்டின் மக்கள், பென்னம்பெரிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்க முடிந்ததென்றால், அந்த நியாயப்பாடுதான் அதற்குக் காரணம்.

இந்த வரிசையில் பார்த்தால், தமிழீழ தனியரசுக்கான போராட்டம் மட்டுமே பரிதாபகரமாகத் தோற்கடிக்கப்பட்ட ஒரேயொரு போராட்டம். வேறெந்த நாட்டு விடுதலை இயக்கத்திடமும் இல்லாத வகையில் தமிழீழப் போராட்டம் நடாத்திய விடுதலைப் புலிகளிடம் மட்டுமே, தரைப்படை, கடற்படை, விமானப்படை என அனைத்து வகைப் படைகளும் இருந்தன. நவீன ஆயுதங்கள் இருந்தன. போதிய பணபலம் இருந்தது. 20 மைல் தூரத்தில் இந்தியத் தமிழர்களின் ஆதரவும், புலம்பெயர் தமிழர் என்ற பலமான சக்தியின் ஆதரவும் இருந்தது. இருந்தும் புலிகள் இறுதியில் அவமானகரமான தோல்வியையே தழுவினர்.

1983 ஜூலை 23ம் திகதி யாழ் திருநெல்வேலியில் 13 இராணுவத்தினரைக் கொன்றபொழுது, அந்த முதல் சம்பவத்திலேயே பிரபாகரன் தனது 'கெட்டித்தனம்' குறித்துத் தப்புக்கணக்குத்தான் போட்டார். ஆனால் அதன் எதிர்விளைவு தென்னிலங்கையில் வாழ்ந்த நூற்றுக்கணக்கான தமிழர்களின் உயிரைப் பறிப்பதிலும், கோடிக்கணக்கான சொத்துக்களை இழப்பதிலுமே போய் முடிந்தது. போராட்டத்தின் மூலம் புலிகள் தமிழ் மக்களுக்குச் சாதித்துக் கொடுத்ததைவிட, அதன் எதிர்விளைவுகள் தமிழ் மக்களுக்கு பாரிய இழப்புகளை உண்டுபண்ணியது. இது இறுதி யுத்தம்வரை நிகழ்ந்தது. பிரபாகரன் இந்தத் தவறை ஒருபோதுமே திரும்பிப் பார்க்கவில்லை. பார்க்க விருமபவுமில்லை.

அதுமாத்திரமல்ல, அரசுக்கு எதிரானது எனத் தொடங்கிய போராட்டம், சாதாரண அப்பாவி சிங்கள – முஸ்லீம் மக்களுக்கு எதிராகத் திசைதிருப்பப்பட்டது. இறுதியில் அது தனது சொந்த இனத்தவர் மீதே திரும்பியது. தமிழீழ தேசிய விடுதலை என்ற அழகிய பதாதையின் கீழ், புலிகளின் எதேச்சாதிகாரம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது. 'தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம்' என்ற நீதியான உள்ளடக்கம் சிதைக்கப்பட்டு, தனிநபர் சர்வாதிகாரத்துக்கான பாசிச நடவடிக்கையாக அது உரு மாறியது.

இதுவே தமிழீழப் போராட்டம் சிதைந்ததுக்கும், புலிகள் அழிந்ததுக்கும் அடிப்படைக் காரணங்களாகும். இதுவே உலகின் மற்றைய விடுதலைப் போராட்டங்கள் எல்லாம் வெற்றிபெற, தமிழர்களின் போராட்டம் மட்டும் தோல்வியைத் தழுவியதற்கான அடிப்படையான வேறுபாடாகும்.

ஆனால் இவ்வளவும் நடந்தும்கூட, அதிலிருந்து பாடம் எதனையும் கற்றுக் கொள்ளாது மீண்டும் மீண்டும் அதே அழிவுப்பாதையில் தமிழ் மக்களை அழைத்துச் செல்லவே சில சக்திகள் முயல்கின்றன. எனவே தமிழ் மக்கள் 1983 ஜூலை வன்செயலின் 28 ஆண்டு நிறைவை நினைவுகூரும் இவ்வேளையில், பழைய அழிவுப்பாதையை நிராகரித்து, புதிய சிந்தனையில், புதிய பாதையில் பயணிக்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

*

**தொடர்பு முகவரி:**
'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கவிதைகள்



## வீரசிந்து

ஒன்றுகூடி நின்று வீரசிந்து
பாடுவோம் – வெற்றி
சூடுவோம்
நேர்மையற்ற பேர்கள்வீழ நின்று
வாட்டுவோம் – நீதி
நாட்டுவோம்

ஈரமற்ற நெஞ்சுகொண்ட
ஈனர் மாய்கவே
ஏழையை மிதித்துவாழும்
எத்தர் வீழ்கவே!
கோழைஎன்று நம்மைஎண்ணும்
கொள்கை போக்குவோம் – கிளர்ச்சி
கொண்டு தாக்குவோம்
கூடிநின்று கொடியுயர்த்திக்
கொட்டி முழக்குவோம் – செல்வர்
கொட்ட மடக்குவோம்
தோழர்காள்! – துணிந்த
வீரர்காள்!!

சூழ்ச்சியால் நமைக்கெடுத்த
ஆட்சி வெல்லுவோம்
வஞ்சகர் செருக்கொழித்து
வாழ்க்கை எய்துவோம்
கஞ்சியில்லை என்ற சொல்லைக்
கப்பலேற்றுவோம் – செகத்தை
ஒப்ப மாற்றுவோம்
பஞ்சையென்று நம்மை எண்ணும்
பான்மை வெல்லுவோம் – புரட்சிப்
பாதை செல்லுவோம்!
தோழர்காள்! – துணிந்த
வீரர்காள்!!
*

## அஞ்சி நிற்க மாட்டோம்

நன்றிகெட்ட மனிதருக்கு
அஞ்சிநிற்க மாட்டோம்
நாவினிக்கப் பொய்யுரைக்கும்
பேரைநம்ப மாட்டோம் – என்று
கூறுவோமடா – ஒன்று
சேருவோமடா
வீறுகொண்டு சிங்கம்போல்
முன்ஏறு வோமடா!

எளிய மக்கள் தலையில்காசு
ஏறி மிதிக்குது – அதை
எண்ணி எண்ணித் தொழிலாளர்
நெஞ்சு கொதிக்குது
வஞ்சனைக்கும் அஞ்சிடோம்
வஞ்சனைக்கும் அஞ்சிடோம்
பஞ்சம் நோய்க்கும் அஞ்சிடோம்
பட்டினிக்கும் அஞ்சிடோம்
நெஞ்சினைப் பிளந்தபோதும்
நீதி கேட்க அஞ்சிடோம்
நேர்மையற்ற பேர்களின்
கால்களை வணங்கிடோம்
காலி என்றும் கூலி என்றும்
கேலி செய்யுங் கூட்டமே
காத்துமாறி அடிக்குது – நீர்
எடுக்கவேணும் ஓட்டமே
தாலி கட்டிக்கொண்ட மனைவி
போலுழைத்த எங்களைத்
தவிக்கவிட்ட பேரை – எந்த
நாளும் மறக்கமாட்டோமே
*

'உங்கள் கேள்வி நியாயமற்றது – துக்ளக்' 16ம் பக்கத்தொடர்ச்சி…..

துக்ளக்கின் பதில் : இலங்கைத் தமிழர்களின் துன்ப நிலை பற்றி 'துக்ளக்' எழுதிய மாதிரி யாரும் எழுதவில்லை என்று நான் நினைக்கிறேன். விடுதலைப் புலிகளிடம் சிக்கி இலங்கைத் தமிழர்கள் தவித்த தவிப்புகள், அனுபவித்த கொடுமைகள், பலியான சிறுவர்களைப் பற்றி எல்லாம் 'துக்ளக்' எழுதிய அளவு வேறு எந்தப் பத்திரிகை எழுதியது என்று எனக்குத் தெரியவில்லை. தமிழ்த் தலைவர்களை எல்லாம் விடுதலைப் புலிகள் கொன்று போட்டபோது, அதைப் பற்றி பக்கம் பக்கமாக 'துக்ளக்' எழுதிய மாதிரி, வேறு எந்தப் பத்திரிகை எழுதியது என்று எனக்குத் தெரியவில்லை.

சிறுவர்களைக் கடத்திக் கொண்டு போய், அவர்களைக் கேடயங்களாகப் பயன்படுத்தி, விடுதலைப்புலிகள் தமிழர்களைத் துன்புறுத்தியபோது, அதை 'துக்ளக்' கண்டித்த மாதிரி, வேறு எந்தப் பத்திரிகை கண்டித்தது என்பதும் எனக்குத் தெரியவில்லை. ஆகையால், உங்கள் கேள்வி நியாயமற்றது.

அன்று இஸ்ரேலிய யூத நிறுவனத்தின் பிரதான முகவராகச் செயல்பட்டவர் யோசப் வெயிற்ஸ் (Joseph Weitz) ஆவார். அவர் செப்ரெம்பர் 27, 1967ல் 'டவார்' (Davar) என்ற சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் பின்வருமாறு கூறியிருக்கிறார் " 1940 இலேயே எமது சியோனிச தலைவர்கள் தீர்மானித்துவிட்டார்கள், ஒரு நாட்டில் இரு இனங்களுக்கு இடமில்லை என்பதை". (இந்த விடயம், தமிழீழ தேசிய விடுதலை என்று சொல்லிக்கொண்டு, இஸ்ரேலிய உளவு அமைப்பான 'மொசாட்'டிடம் பயிற்சி பெற்ற ஈழத்துப் புலிகளுக்கு தெரிந்திருக்குமோ என்னவோ?)

மேலும் அவர் கூறுகிறார், " பாலஸ்தீனத்திலுள்ள முழு அராபியர்களையும் அயலிலுள்ள நாடுகளுக்குக் கலைத்துவிட்டால்தான், பல மில்லியன் யூதர்களை இஸ்ரேல் உள்வாங்க முடியும்".

இவ்வாறான இனச்சுத்திகரிப்பு அடிப்படையிலான சியோனிசக் கொள்கையே 1948ல் இருந்து இன்றுவரை தொடர்கிறது. இதற்காகக் கொலை செய்தல், சொந்த இடங்களைவிட்டு விரட்டுதல், பொருளாதாரத்தடை விதிப்பது, கல்வி கலாச்சார வசதிகளை மறுப்பது போன்ற படுபாதகமான செயல்களை பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேலியர்கள் மேற்கொள்கின்றனர்.




பெர்னடொத்தே ( Count Bernadotte) என்பவர், 1948 செப்ரெம்பர் 17ல் 'Stern Gang' என்றழைக்கப்படும் யூத பயங்கரவாதக் குழுவால் படுகொலை செய்யப்பட்டார்.

அவர் செய்த 'குற்றம்' என்னவென்றால், சியோனிசவாதிகளால் விரட்டப்பட்ட அப்பாவி பாலஸ்தீன மக்களை திரும்பவும் அவர்களது நிலங்களில் குடியேற அனுமதிக்க வேண்டும் என ஐ.நா.பொதுச்சபைக்கு பரிந்துரை

# பல இலட்சம் யூதர்கள் இஸ்ரேலில் இருந்து வெளியேறி வருகின்றனர்!

– காவலூர் பாலன் –

பென்கூரியன் 1948 மார்ச்சிலேயே, 'Dalet' என்ற இராணுவத் திட்டத்தை வகுத்து இருந்தார். அதன்படி, பாலஸ்தீன மக்களை நாட்டை விட்டுக் கலைப்பதும், அவர்களது கிராமங்களை – நகரங்களை முற்றுமுழுதாக அழித்தொழிப்பதும், அதன்மூலம் அவர்களைத் திரும்பவும் வந்து குடியேறுவதைத் தடுத்தலுமாகும். இத்திட்டத்தின் அடிப்படையில், 1948 மே 15ந் திகதிக்கு முன்னரே, அதாவது இஸ்ரேல் என்ற நாடு உருவாவதிற்கு முன்னரே, 350,000 பாலஸ்தீனியர்கள் அடித்து விரட்டப்பட்டார்கள். இதற்காக 1948ல் 500 க்கு மேற்பட்ட பாலஸ்தீன கிராமங்கள், நகரங்கள் கைப்பற்றப்பட்டு, அவை முற்றுமுழுதாக அழித்து நாசம் செய்யப்பட்டன.

ஐ.நாவின் பிரதிநிதியாக இரு பிரிவினருக்குமிடையிலான பொதுவான தொடர்பாளராகச் செயற்பட்ட, மனித நேயமுள்ள நேர்மையான செயற்பாட்டாளரான கவுண்ட்

செய்ததாகும். அவ்வாறு நியாயமாக நடந்த ஒரு நடுநிலைவாதியை கொலை செய்ய உத்தரவிட்டவர், 'Stern Gang' இன் அன்றைய தலைவரும், பின்னர் இஸ்ரேலின் பிரதம மந்திரியாகச் செயலாற்றியவருமான ஜிற்ஸாக் சாமிர் (Yitzhak Shamir) ஆகும்.

இதேவேளை, தங்கள் தாய்நாட்டிலிருந்து விரட்டப்பட்ட பல லட்சம் பாலஸ்தீன மக்கள் தங்கள் தாய்நாட்டிற்குத் திரும்புவதும், இரு இனங்களும் ஒற்றுமையாக ஒரு நாட்டில் வாழ்வதும்கூட, இன்றைய சூழ்நிலையில் நடக்கககககூடியதல்ல.

உலகின் பல பகுதிகளிலிருந்தும், முன்னாள் சோவியத் யூனியனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் இஸ்ரேலுக்குச் சென்று குடியேறிய பல லட்சம் யூத மக்கள், இன்று

திரும்பவும் அங்கிருந்து வெளியேறுவது இன்றைய யதார்த்தமாகும். அண்மையில் வந்த ஒரு புள்ளிவிபரத்தின்படி, 5 லட்சத்துக்கு மேற்பட்ட இஸ்ரேலிய குடிமக்கள் அமெரிக்க குடியுரிமையைப் பெற்று இருநாட்டு பிரசைகளாக வாழ்வதுடன், பலர் அமெரிக்காவுக்கு நிரந்தரமாகவே இடம்பெயர்ந்துமுள்ளனர். அதேவேளை, இஸ்ரேல் என்ற 'சொர்க்கத்தை' வேண்டி இடம் பெயர்ந்தவர்கள், இன்று அங்கு நிலவும் மிக மோசமான வர்க்க இடைவெளி காரணமாகவும், இன வேறுபாடுகள் காரணமாகவும், கனவுகள் சிதைவுண்டு, அதைவிட்டு வெளியேறி, அமெரிக்கா, கனடா, மேற்கு ஐரோப்பா, ஏன் முன்னைநாள் சோவியத் ஒன்றிய நாடுகளுக்கும் கூட திரும்ப விரும்புவதுடன், பலர் குடிபெயர்ந்தும் விட்டார்கள்.

அண்மையில் வெளிவந்த ஓர் அமெரிக்க நிறுவனத்தின் ஆய்வின்படி, இன்னும் சில வருடங்களில் இஸ்ரேல் என்ற ஒரு நாடு இருக்காது என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இவ்வாறுதான் ஏகாதிபத்தியத்தாலும், உலகப் பிற்போக்கு சக்திகளாலும் புலிகள் என்ற பயங்கரவாத இயக்கம் தோற்கடிக்கப்பட முடியாத ஒன்று எனக் கடைசிவரையும் திடமாக முற்றுமுழுதாக நம்பப்பட்டதுடன், 'தமிழ் ஈழம்' என்பது ஒரு நிறுவப்பட்ட நாடு என்றுகூட கொள்ளப்பட்டது. ஆனால் கடைசியில் பரந்துபட்ட மக்களுக்கு எதிரான அந்த அமைப்பும், அதன் மாபியாத் தலைமையும், இலங்கையின் தமிழ், சிங்கள, முஸ்லீம், பறங்கியர் என அனைத்து மக்களாலும் எவ்வாறு முற்றுமுழுதாகத் துடைத்தெறியப்பட்டதோ, அதுபோன்றே இஸ்ரேலின் முடிவும் அமையக்கூடிய சாத்தியக்கூறுகள் நிறையவே தென்படுகின்றன. எனவே எதிர்காலத்தில் ஏகாதிபத்திய கைப்பாவையான இஸ்ரேலிய சியோனிசத் தலைமை முற்றாக முறியடிக்கப்பட்ட பாலஸ்தீனத்தில், இருபகுதி மக்களும் சரிநிகர் சமானமாக வாழும் நிலை உருவாகும் எனத் திடமாக நம்பலாம்.

தொடரும்….
*

# கிழக்கில் அதிரடிப்படை முகாம்கள் மூடப்பட்டன!

கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக இருந்துவந்த கல்முனை மற்றும் காரைதீவு அதிரடிப்படை (Special Task Force) முகாம்கள் 2011 யூன் 27ம் திகதியுடன் முற்றாக மூடப்பட்டுள்ளன. இதற்கு முன்னதாக அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், அறுகம்பை, அக்கரைப்பற்று, கஞ்சிகுடிச்சாறு, காஞ்சிரம்குடா, சாகாமம், வம்மியடி, திருக்கோவில் போன்ற பகுதிகளில் நிலை கொண்டிருந்த அதிரடிப் படையினர் முற்றாக வெளியேறியிருந்தனர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் 1983 யூலை 23ம் திகதி யாழ் திருநெல்வேலியில் புலிகள் இராணுவ ட்ரக் வண்டி மீது நடாத்தப்பட்ட கண்ணி வெடித்தாக்குதலில், 13 சிப்பாய்கள் உயிரிழந்ததைத் தொடர்ந்து, அரச படைகளுக்கும் தமிழ் இயக்கங்களுக்குமிடையிலான போர் ஆரம்பமானது.

போர் உக்கிரமடைந்திருந்த சூழலில், ஜே.ஆர். ஒரு கட்டத்தில் தனது மகன் ரவி ஜெயவர்த்தனவின் தலைமையில், இஸ்ரேலில் உள்ளது போன்ற விசேட அதிரடைப்படைகளை உருவாக்கி, அவற்றில் பெரும்பாலானவற்றை கிழக்கு மாகாணத்தில் நிலைகொள்ள வைத்தார்.

இந்த 30 வருடப்போரின் போது மிகவும் கூடுதலாகப் பாதிக்கப்படது கிழக்கு மாகாணமே. புலிகள் அதிகளவிலான தமிழ் சிறுவர்களைத் தமது படையணிகளுக்குப் பிடித்துச் சென்ற அதேவேளையில், இராணுவமும் புலிகளுக்கு உதவியது என்ற பெயரில், கிழக்கில் ஏராளமான பொதுமக்களைப் படுகொலை செய்தது. அதில் பெரும்பாலானவை இந்த அதிரடிப்படையினராலேயே மேற்கொள்ளப்பட்டன.

இப்பொழுது போர் முடிவுற்றதைத் தொடர்ந்து, அரசாங்கத்தால் கிழக்கிலுள்ள அதிரடிப்படை முகாம்கள் படிப்படியாக மூடப்பட்டு வருகின்றன.

''எல்லா அறிவியல் பிரிவுகளுக்கும் கணிதமே மகாராணி. ஆனால் எண்கணிதமே கணிதத்தின் மகாராணி''

**- கணித மேதை Carl Friedrich Gauss**

# மூத்த தமிழ்ப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி காலமானார்!

இலங்கையின் மூத்த தமிழ்ப் பேராசிரியர்களில் ஒருவரான கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள், உடல் நலக்குறைவால், தமது 79வது வயதில், 2011 யூலை 6ம் திகதி கொழும்பில் காலமானார்.

பேராசிரியர் சிவத்தம்பி, ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் சமகால மொழிபெயர்ப்பாளராகவும், பின்னர் வித்தியோதய, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறை விரிவுரையாளராகவும், பல ஆண்டுகள் கடமையாற்றியவர். இதுதவிர தமிழ்நாட்டிலும், இங்கிலாந்திலும், சில ஐரோப்பிய நாடுகளிலும் அழைப்பு விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள், தமிழ் செம்மொழி மாநாடு, இஸ்லாமிய தமிழ் மாநாடுகள் உட்பட பல அமர்வுகளில் ஆய்வுக்கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார்.

பொதுவாகத் தமிழிலக்கியத்துறைக்கும், குறிப்பாக ஈழத்து முற்போக்கு இலக்கியத்துக்கும் பேராசிரியர் சிவத்தம்பி முக்கிய பங்களிப்புகளைச் செய்துள்ளார். தமிழில் மார்க்சிய இலக்கியத் திறனாய்வின் முன்னோடிகளில் ஒருவரான பேராசிரியர் க.கைலாசபதியுடன் இணைந்து, சிவத்தம்பி செயற்பட்ட ஒருவராவார்.

தமிழிலக்கியம், கவின்கலைகள், தமிழர் பண்பாடு, வரலாறு, அரசியல், சமூகவியல், நாட்டாரியல், யாழ்ப்பாணியம் என பல துறைகளிலும் ஆழமான ஆய்வுகளை மேற்கொண்ட சிவத்தம்பி, அவை சம்பந்தமாக 75க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளதுடன், நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

“யானைக்கும் அடி சறுக்கும்” என்பது போல, சிவத்தம்பியின் பிற்கால அரசியல் வரலாறு அமைந்துவிட்டதுதான், அவரது சோகமாகும். தனது ஆரம்பகால அரசியலை ஒன்றுபட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் ஆரம்பித்து சிறப்பாகச் செயற்பட்ட சிவத்தம்பி, 1963ல் சித்தாந்த முரண்பாடு காரணமாக அக்கட்சி பிளவுண்ட போது, மாஸ்கோசார்பு அணியுடன் சேர்ந்து கொண்டார். அக்கட்சி 1970 முதல் சிறீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டரசாங்கங்களில் அங்கம் வகித்த போது, அரசு சார்ந்த பல பதவிகளை வகிக்கும் வாய்ப்பு சிவத்தம்பிக்கும் கிட்டியது.

பின்னர் தமிழ் தேசியப் போராட்டம், தமிழீழத்துக்கான ஆயுதம் தாங்கிய போராட்டமாக மாறிய போது, சிவத்தம்பி கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு ஒதுங்கி, தமிழ் தேசியவாத சக்திகளுடன் தொடர்புகளை பேணத் தொடங்கினார். ஆரம்பத்தில் இடதுசாரிப் போக்குக்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ் போன்ற இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். இதன் காரணமாக ஒரு கட்டத்தில் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த கிட்டு, சிவத்தம்பிக்கு ‘மரண தண்டனை’ விதிப்பது என முடிவெடுத்தார். பின்னர் அது சிவத்தம்பியின் நண்பர்களான, கிட்டுவுக்கு ஆரம்ப காலங்களில் கல்வி கற்பித்த இரு ஆசிரியர்களின் தலையீட்டால் கைவிடப்பட்டது.

பின்னர், சிவத்தம்பி முற்றுமுழுதாக தமிழ் தேசியவாதத்தின் கனதியான பிரச்சாரகராக மாறியதுடன், புலிகளின் வாதியாகவும் மாறினார். புலிகளின் நியாயவாதியாக மாறிய பின்னர், அவர் கூறிய கருத்துக்கள் சில, அதாவது புலிகளின் ‘கந்தன் கருணை’ படுகொலையை நியாயப்படுத்தியமையும், புலிகளின் ‘துரோகிகள்’ ஒழிப்பை நியாயப்படுத்தி, “கயிறாக இருந்தாலும் பாம்பென்று நினைத்து அடிக்க வேண்டும்” என்ற கருத்தும், தமிழ் அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சையையும் கண்டனத்தையும் கிளப்பியிருந்தது.

இதுதவிர, சிவத்தம்பி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவராக இருந்த காலத்தில் நடைபெற்ற பண மோசடி குறித்து விசாரிக்கவென லண்டனிலிருந்து வந்த சட்டத்தரணியும், அக்கழகத்தின் ஸ்தாபகருமான கந்தசாமி, இயக்கமொன்றினால் கடத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம், சிவத்தம்பி மீது கறைபடியக் காரணமான இன்னொரு சம்பவமாகும். புலிகள் ராஜினி திராணகம போன்ற பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உட்பட தமிழ் சமூகத்தின் பல புத்திஜீவிகளையும், கல்விமான்களையும் படுகொலை செய்தபோது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்று பேராசிரியர் சிவத்தம்பியும் மௌனம் காத்ததோடு மட்டுமல்லாது, அதன்பிறகும் புலிகளின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி வந்தமை, அவர் பற்றிய பல விடையளிக்க முடியாத கேள்விகளை தமிழ் சமூகத்தில் எழுப்பிவிட்டுள்ளது.

அவரது பிற்கால வாழ்வின் அரசியல் போக்கு என்ற கருமையான பக்கத்தை விடுத்து, மறுபகுதியான ஆரம்பகால அரசியலையும், இலக்கியம், பண்பாட்டு, சமூகவியல் போன்ற துறைகளிலான பங்களிப்பும், தமிழ் சமூகத்துக்கான அவரது கொடைகள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

*

# திரையிசையில் கர்நாடக சங்கீதத்தின் செல்வாக்கு



**எ**ன்னதான் ராப், ஜாஸ், பொப், கானா, குத்துப்பாட்டு என இசையின் வகையினங்கள் நீண்டபோதிலும், கர்நாடக சங்கீதத்தை உதறித்தள்ளிவிடமுடியாது. கர்நாடக சங்கீத இராகத்தைத்தழுவிய மென்மையானபாட்டில் (Melody songs) மெய்மறக்காதவர்கள் எவருமில்லை. மெல்லவருடிவரும் மெட்டில் மயங்காதவர்கள் எவருமில்லை. உதாரணமாக, இரண்டு வருடங்களிற்கு முன்னர் வெளிவந்த சுப்ரமணியபுரம் படத்தில் வந்த கண்களிரண்டால் பாட்டைச்சொல்லலாம். அப்படத்திற்கான இசை : ஜேம்ஸ் வசந்தன். பாடியோர் : பெல்லிராஜ்,தீபாமெரியம். தீபாமெரியத்திற்கு சிறந்த பாடகிக்கான விருதும் கிடைத்தது. இந்தப்பாடல் மிகவும் பிரபல்யமடைந்தது மட்டுமல்லாமல், எல்லோரையும் ஈர்த்திருந்தது.

இந்தப்பாடலானது, ரீதிகௌளை இராகத்தில் வார்க்கப்பட்டது. ரீதிகௌளை இராகத்தை, இசைஞானி இளையராஜாவே திரைப்படத்தில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியிருந்தார். பாலமுரளிகிருஷ்ணா, ஜானகி தனித்தனியே பாடிய சின்னக்கண்ணன் அழைக்கிறான் என்றபாடலும் இந்தவகையறாவே.

நாம் இன்னும் பின்னோக்கிச்சென்றோமானால், எஸ்.ஜி.கிட்டப்பாவின்(1906-1933) 'காயாதகானகத்தே', அவரது மனைவி சுந்தராம்பாளின் 'பழனியப்பா ஞானப்பழம் நீயப்பா', பி.சுசீலாவின் தில்லானா மோகனாம்பாளில் அமைந்தது. ஏன், எம்.எஸ்.விஸ்வநாதனின் இசையில்வந்த இருமலர்கள் படப்பாடலான 'மாதவிப்பொன்மயிலாள்' பாடலும் கரகரப்பிரியாவிற்குரியதே.

காயாதகானகத்தே பாடலை கிட்டப்பா மட்டும் பாடவில்லை. ரி.ஆர்.மகாலிங்கம்(1924 - 1978),ரி.எம்.சௌந்தரராஜன் ஆகியோரும் பாடியுள்ளனர். முதலில், கிட்டப்பா வள்ளி நாடகத்திற்காகப்பாட, 1945இல் ஸ்ரீவள்ளி என்ற திரைப்படத்திற்காக ரி.ஆர். மகாலிங்கம் பாடினார். இவருக்கு புல்லாங்குழலும் கைவரும். இவர் பின்னணிப்பாடகராக வருவதைவிரும்பாது இறுதிவரை பாட்டு நட்சத்திரமாகவே மிளிர்ந்தார். கர்நாடக சங்கீத ஜம்பவான்களே சற்றே தயங்கும் உச்சஸ்தாயி பிருகாக்களையும், சங்கதிகளையும் அப்பாடலில் கிட்டப்பா அநாயாசமாகக் கையாண்டார். ஒரு பாட்டில் சங்கதியென்பது குரலில் வரும் அசைவுகளையும், பிருகா என்பது விரைவாகக் குரலை உருட்டுவதையும் குறிக்கும்.

அந்தக்காலங்களில் ஒலிபெருக்கி தோற்றம் பெறாத காரணத்தினால், கொட்டகையில் அமர்ந்திருக்கும் கடைசிவரிசை ரசிகர்களுக்கும் கேட்கும் வண்ணம் மேல்ஸ்தாயியில் பாடுவார்கள். 'எவரும் எட்டமுடியாத உச்சத்தில் கிட்டப்பா உயர்த்தி வைத்த பாடலை மகாலிங்கமும் எட்டிவிட்டதாகவும், கிட்டப்பா மேடையில் நிகழ்த்திய அசுரசாதனையை, மகாலிங்கம் திரையில் நிகழ்த்தியுள்ளார்' என்றும் வாமனன் குறிப்பிட்டிருந்தார். பின்னாளில் இதேபாடலை, தியாகராஜபாகவதரின் பாணியைப் பின்பற்றிய சௌந்தரராஜனும் ராஜபாட்ரங்கத்துரை என்ற திரைப்படத்தில் பாடியுள்ளார். ஏன், நம்மவூரு சோமண்ணை மதுபோதையில் பாடியதையும் என்னால் மறக்க முடியவில்லை.

என்னவோ என் நெஞ்சிலே இசை வந்து துளைத்தது........... இசை வந்த திசைபார்த்து மனங்குளிர்ந்தேன்.

**--இசைப்பிரியன்--**

'முதலாளித்துவம் ஒரே சீராக வளர்வதில்லை. நான்கு கால் பாய்ச்சலில் அது முன்னேறிக்கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் அனைத்து நாடுகளிலும் ஒரே சமயத்தில் புரட்சி ஏற்படுவது சாத்தியமில்லை. ஒவ்வொரு நாடாக முதலாளித்துவத்தில் இருந்து வெளியேறுவதுதான் சரியாக இருக்கும்.' - லெனின்

# சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சரியானதும் மகத்தானதுமாகும்

## 90வது ஆண்டு நிறைவு விழாவில் உரை




சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்டதின் 90வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள், 2011 ஜூலை 1ம் திகதி முதல் சீனா முழுவதும் கோலாகலமாகக் நடைபெற்று வருகின்றன.. இந்தக் கொண்டாட்டங்களின் துவக்க விழாவின் போது, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் ஹூ யுன் ராவோ நிகழ்த்திய ஆரம்ப உரையைக் கீழே தருகின்றோம்.

"மார்க்சியத்தை உயர்த்திப் பிடிப்பதோடு, அதைச் சீன நிலைமைகளோடும், தற்காலத்திற்கு ஏற்ற வகையிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். மார்க்சியத்தை அறிவியல் பூர்வமாகப் பார்க்க வேண்டும். அதைக் கோட்பாட்டிலிருந்து நடைமுறைக் கொள்கையாக மாற்ற, புதிதாக உருவாகியுள்ள நிலைமைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்வது அவசியம். அப்போதுதான், மார்க்சிய அரசியல் கட்சிக்கான நிலையை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியால் அடைய முடியும். மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மறுக்கவே முடியாத உண்மைகள் என்பதை, சீனக் கம்யூனிஸ்ட்டுகளான நாங்கள் நம்புகின்றோம். அதேவேளையில், நடைமுறைகள் மாறுகையில் அதற்கேற்றவாறு மார்க்சியத்தையும் மெருகேற்ற வேண்டும். வெறும் ஏட்டுச் சுரைக்காயாக நாங்கள் மார்க்சியத்தைப் பார்க்கவில்லை. புதிய வரலாற்றுச் சூழலில் மார்க்சியத்தை உயர்த்திப் பிடிக்கும் அதேவேளையில், நடைமுறையில் எழுந்துள்ள பல்வேறு புதிய பிரச்சினைகளிலும் கவனம் செலுத்த வேண்டும். அதன்மூலம் அறிவியல் பூர்வமான வழிகாட்டுதலை நடைமுறையில் நம்மால் கொண்டுவர முடியும்.

வரலாறு மற்றும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் மூன்று பெரும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. முதலாவதாக, தேசிய விடுதலை மற்றும் மக்கள் விடுதலை ஆகிய இரண்டையும் சாத்தியமாக்கிய புதிய ஜனநாயகப் புரட்சியை, மக்களின் ஆதரவோடு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி செய்து காட்டியது. இரண்டாவதாக, சோசலிசப் புரட்சியை நடாத்தி, அடிப்படையான சோசலிசக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. மூன்றாவதாக, புதிய சீர்திருத்தப் புரட்சியை உருவாக்கி, அதைக் கட்சி நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்தப் பணியை செய்து கொண்டிருக்கும் வேளையில், சீனத் தன்மையுடனான சோசலிசத்தை வளர்த்தெடுக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.


இந்த மூன்று சாதனைகளும், மொத்த சீன நாட்டினதும் அதன் மக்களினதும் வருங்காலத்திற்கு புதிய தோற்றத்தை அளித்துள்ளன. உள்நாட்டுப் பிரச்சினைகள், வெளிநாடுகளின் ஆக்கிரமிப்பு என்பவற்றால் பாதிக்கப்பட்டிருந்த சீனா, அதிலிருந்து விடுபட்டு, வளர்ச்சியை நோக்கி புத்துணர்ச்சியுடன் நடை போடுகின்றது. நமக்குக் கிடைக்கும் பாடம் என்னவென்றால், வரலாறும் மக்களும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சியம், சோசலிசப்பாதை மற்றும் சீர்திருத்தக் கொள்கைகள் என்பவற்றைத் தெரிவு செய்துள்ளனர் என்பதாகும். மகத்தான மற்றும் சரியான மார்க்சிய அரசியல் கட்சியாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி திகழ்கிறது என்பதை வரலாறு முழுமையாக நிரூபித்துள்ளது.

மக்களே எமக்குப் பிரதானம். மக்களிடமிருந்து தனிமைப்படுவது சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கே ஆபத்தாக அமையும். ஆதலால் மற்றெல்லாவற்றையும் தள்ளி வைத்துவிட்டு, மக்கள் நலனுக்கு எது நல்லதோ அதையே முன்னிறுத்த வேண்டும். மக்களின் பொருளாதார, அரசியல், சமூக உரிமைகளை கட்சியின் சகல உறுப்பினர்களும் பாதுகாக்கும் பணியில் ஈடுபட வேண்டும். மக்களோடு நெருக்கமாக இருந்து அவர்களின் பிரச்சினைகளைக் கவனிக்கும் வகையில், கட்சி மற்றும் அரசின் அனைத்து மட்டங்களிலும் இருப்பவர்கள் செயல்படுவது அவசியம்."

✷ பூர்ஷ்வா (Bourgeois) என்பது ஜெர்மன் சொல். உற்பத்திச் சாதனங்களை உடைமையாகப் பெற்றிருக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் (முதலாளித்துவ வர்க்கம்) என்பது பொருள்.

*தொழிலாளர் என்பதைக் குறிக்கும் புரோலிடேரியேட் (Proletariat) என்பதும் ஜெர்மனியச் சொல்லே. கம்யூனிஸ்ட் கட்சி இந்தப் பதங்களை அனைத்து மொழிகளுக்கும் பொதுவான பதங்களாக மாற்றியது.* ✷

# இலங்கையில் பொதுமக்கள் மீதான
# ‘விடுதலை இயக்க’ கொலைத் தாக்குதல்களின் விபரம்!



**சென்ற இதழ் தொடர்ச்சி....**

- **1985 நவம்பர் 7**

திரிகோணமலை மாவட்டத்திலுள்ள நமல்வத்தை என்ற சிங்களக் கிராமத்தில் புலிகள் தாக்கியதில் 10 கிராமவாசிகள் கொல்லப்பட்டனர்.

- **1986 பெப்ரவரி 19**

திரிகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாயில் புலிகள் துப்பாக்கிகள், வாள்கள், கத்திகள் கொண்டு தாக்கியதில் 19 சிங் களக் கிராமவாசிகள் கொல்லப்பட்டனர்.

- **1986 மே 3**

கட்டுநாயக்காவிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமானமொன்றுக்குள் ஆயுத இயக்கமொன்று நேர வெடிகுண்டொன்றை வெடிக்கச் செய்ததில் வெளிநாட்டவர் உட்பட 16 பேர் கொல்லப்பட்டனர்.

- **1986 மே 5**

திரிகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியாவில் புலிகள் தாக்கியதில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

- **1986 மே 7**

கொழும்பிலுள்ள இலங்கை தந்நித் தலைமைக் காரியாலயத்தில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர்.

- **1986 மே 25**

திரிகோணமலை மாவட்டத்திலுள்ள மகாதிவுலுவெவ கிராமத்தைத் தாக்கிய புலிகள் கிரமவாசிகளின் 20 வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

- **1986 யூலை 8**

திரிகோணமலையிலுள்ள சிங்களக் கிராமங்கள் சிலவற்றைத் தாக்கி 15 பேரைக் கொலை செய்தனர்.

- **1986 யூலை 9**

திரிகோணமலை மாவட்டத்திலுள்ள முள்ளிப்பொத்தானை கிராமத்தைத் தாக்கி 16 பேரைக் கொலை செய்தனர்.

- **1986 யூலை 13**

திரிகோணமலை மாவட்டத்திலுள்ள பாவற்குளம் கிராமத்தில் ஒரு ஜீப்புடன் புகுந்த புலிகள், பொதுமக்கள் மீது கண்டபடி சுட்டதில் 11 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

- **1986 யூலை 17**

திரிகோணமலை மாவட்டத்திலுள்ள சீனிக்கூட்டுத்தாபனத்தில் நடாத்திய குண்டு வெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

**அடுத்த இதழில் தொடரும்......**

## ஒபாமா சொன்னதும், ஒசாமா சொன்னதும்!

“அமெரிக்கா எல்லா நாடுகளையும் ஆக்கிரமித்துக்கொள்ள நினைக்கிறது. எல்லா நாடுகளின் வளங்களையும் கொள்ளையடிக்க நினைக்கிறது. அதன் முகவர்கள்தான் நம்மை ஆள வேண்டும் என்று நினைக்கிறது. இதற்கு நாம் எல்லோரும் சம்மதிக்க வேண்டும் என்று நினைக்கிறது. எதிர்ப்பவர்களைப் பயங்கரவாதிகள் என்கிறது. யார் பயங்கரவாதி... அமெரிக்காவா? அமெரிக்காவின் இத்தகைய பயங்கரவாதத்தை எதிர்ப்பவர்களா?”

**- அல் கைடா தலைவர் ஒசாமா பின் லேடன்**

“அமெரிக்கா எதைச் செய்ய நினைக்கிறதோ, அதைச் செய்து முடிக்கும். உலகத்துக்கு நாம் மீண்டும் சொல்லும் செய்தி இதுதான்!”

**- அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா**

“அமெரிக்கா எதை எல்லாம் செய்ய நினைக்கிறதோ, அதை எல்லாம் செய்து முடித்துவிடுவதால்தான், ஒசாமாக்கள் உருவாகிறார்கள் என்பதை அமெரிக்க அதிபர்களுக்கு யார் சொல்வது?” என இந்தியப் பத்திரிகை ஒன்று கேள்வி எழுப்பியிருக்கிறது.



ராகுல்ஜி

# இந்தியப் பேரிலக்கியத்தின் மணிமுடியாகத் திகழும் ராகுல்ஜியின் "வால்காவிலிருந்து கங்கை வரை"

பேராசிரியர் ராகுல சங்கிருத்தியாயன் இந்தியா உலகிற்கு வழங்கிய பேறிஞர்கள் வரிசையில் முன்னணியில் இருப்பவர். சுமார் 36 மொழிகளைத் தெரிந்திருந்த அவர், 150 நூல்கள் வரை படைத்துள்ளார். இந்நூல்களில் அவரது புகழ்பெற்ற படைப்பான 'வால்காவிலிருந்து கங்கைவரை' தமிழில் இதுவரை 25க்கும் மேற்பட்ட பதிப்புகளைக் கண்டிருக்கிறது. இந்த நூலில் கி.மு.6000த்திலிருந்து 20ம் நூற்றாண்டு வரையிலான மனித சமுதாய வளர்ச்சியை, ஆதாரபூர்வமான தகவல்களுடன் 20 கதைகளாகப் படைத்துள்ளார். இந்த நூல் தமிழர்கள் உட்பட இந்தியாவின் அனைத்து இனங்களையும் சேர்ந்தவர்கள், தமது முற்போக்கு சிந்தனையை வளர்த்துக் கொள்வதில் அரிச்சுவடியாகப் பயன்பட்டு வருகிறது. இந்த நூலை முதன்முதலில், தமிழ்ப் புத்தகாலயத்தின் அதிபரும், சமூக நோக்கு கொண்ட பெரியாருமான கண. முத்தையா அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். கண. முத்தையா அவர்கள் 1949ல் இந்நூலின் முதல் பதிப்பை வெளியிட்ட போது எழுதிய, வாசகர்களுக்கான குறிப்புரையை அதன் முக்கியத்துவம் கருதி கீழே தந்திருக்கின்றோம்.

பேரறிஞர் ராகுல சங்கிருத்தியாயன் இலங்கையில் வித்தியாலங்கார பல்கலைக்கழகத்திலும், சோவியத்யூனியனின் லெனின்கிராட் பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கண.முத்தையா அவர்கள் எழுதிய 'வாசகர்களுக்கு' என்ற தலைப்பிலான கருத்துரை வருமாறு:

பேராசிரியர் ராகுல சங்கிருத்தியாயன் தமிழ் உலகத்திற்கு புதியவரல்ல. அவருடைய "பொது உடைமை தான் என்ன?" என்ற நூலைப் படித்தவர்கள் ஒவ்வொருவரும், இந்த அறிவுக் கடலின் சிறு பகுதியையேனும் பார்த்திருப்பார்கள். பிள்ளைப் பருவத்திலேயே அறிவுத் தாகமெடுத்த ராகுல்ஜி அறிவைச் சேகரிப்பதற்காக உலகத்தின் மூலை முடுக்குகளையெல்லாம் சுற்றியிருக்கிறார். ஐக்கிய மாகாணத்தில் ஆஜம்கட் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு சிறு கிராமத்திலே பிறந்த அவர், காசி நகரிலே தொடங்கிய தமது அறிவு சேகரிக்கும் முயற்சியை லெனின்கிராடு சர்வகலாசாலைப் பேராசிரியர் பதவியைப் பெற்ற பிறகுங்கூடத் தொடர்ந்து செய்து வந்திருக்கிறார். ஆயுள் முழுவதும் உழைத்துச் சேகரித்த அறிவுப் பொக்கிசத்தை அவருடைய நூல்களிலே அள்ளித் தந்திருக்கிறார்.

சமுதாயத்தின் தோற்றம், வளர்ச்சி, நாகரிகம் முதலியவைகளைப் பற்றித் தத்துவ ரீதியாக, "மனித சமுதாயம்" என்ற ஒரு பெரிய நூலை எழுதியிருக்கிறார். அவரே கூறியிருப்பதுபோல், அந்த முக்கிய பிரச்சினைகளைச் சாதாரண சனங்களும் புரிந்து கொள்வதற்காக இந்த "வால்காவிலிருந்து கங்கை வரை"யை எழுதியிருக்கிறார். இது அவருடைய சிறந்த சிருஸ்டிகளில் ஒன்று.

இதிலுள்ள 20 கதைகளுள், ஒவ்வொன்றும் மனித சமுதாய வளர்ச்சியின் ஒவ்வொரு படிகள். தனி மனிதனையோ தனிச் சம்பவத்தையோ மையமாகக் கொள்ளாமல் சமுதாயத்தின் முக்கியமான மாற்றம் அல்லது பெரிய வளாச்சிகளையே மையமாகக் கொண்டு, கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. சில கதைகள் அந்த வளர்ச்சி, மாற்றத்தின் போக்கைப் பொறுத்து இரண்டு மூன்று தலைமுறைகளைத் தம்முள் அடக்கிக் கொண்டிருக்கின்றன. சில கதைகள் ஒரு தலைமுறையைக் கூடப் பூராவாகத் தம்முள் அடக்கவில்லை. ஒவ்வொரு கதையிலும், அந்தக் காலத்துப் பழக்க வழக்கங்கள், சூழ்நிலைகள் அப்படியே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இவைகள் வெறும் கதைகளல்ல. சமுதாய வளர்ச்சியையும், சரித்திரத்தையும், காலங்களையும் நிர்ணயித்துக் கதை உருவத்திலே எழுதப்பட்டிருப்பதால், கதைப் போக்கிற்கு அவசியமில்லாத விசயங்கள் ஒவ்வொரு கதையின் மத்தியிலும் இடம் பெற்றிருப்பதாகத் தோன்றலாம். சில இடங்களைப் படிக்கும் பொழுது, சரித்திர ஏடுகளைப் படிப்பது போன்ற உணர்ச்சி கூட ஏற்படலாம். ஆனால் சரித்திரத்தையும் மனித சமுதாய வளர்ச்சியையும் தெரிந்து கொள்வதற்கு அவைகள் இன்றியமையாதவை. சரித்திரத்தைப் படிப்பதால் ஏற்படும் சலிப்பும், தத்துவத்தைக் கற்பதால் ஏற்படும் சிரமமும் தோன்றாதபடி, கதை உருவிலே இந்த அம்சங்களை அற்புதமாகப் பின்னித் தந்திருக்கிறார் ராகுல்ஜி. இது சர்பத் அல்ல. மருந்துதான். ஆனால் மருந்தின் கசப்போ, கைப்போ தெரியாதபடி சர்பத்தாக ஆக்கப்பட்டிருக்கிறது.

இந்த சிறந்த நூலைத் தமிழிலே செய்ய வேண்டுமென்று நாள் தோறும் வளர்ந்து வந்த ஆசையே, துணிவாக இந்நூலை மொழிபெயர்க்கும் வேலையில் என்னை ஈடுபடும்படி செய்தது.

முடிந்தவரை சாதாரண தமிழ் மக்களும் புரிந்து கொள்ளும்படி எழுத முயற்சி செய்திருக்கிறேன். ஆனால், விசயத்தின் கௌரவமும், ராகுல்ஜியின் அளவற்ற அறிவுச் செல்வத்தை ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குக் கொண்டு வருவதில் உள்ள சிரமமும் சேர்ந்து, நடையை இன்னும் எளிதாக ஆக்க முடியாமற் செய்துவிட்டன.

இந்நூலை மொழி பெயர்த்து எழுதத் தொடங்கியது முதல், ஒப்பு நோக்கிப் பிழை திருத்தி அச்சிட்டுப் புத்தக உருவில் வெளிவரும் வரை, எனது நண்பர் திரு.ராம சண்முகம் அவர்கள் பூரணப் பொறுப்பெடுத்து ஒத்துழைத்தார். அவருக்கு என் உளம் நிறைந்த நன்றி.

கண. முத்தையா
சென்னை
1.8.1949
*

# ஊடகங்களில் உண்மைகள் அருகி வருகின்றன! யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் விசனம்!!

**''ஊடகங்களில் இன்று உண்மைகள் அருகி வருகின்றன. உண்மைக்குப் புறம்பான செய்திகளுக்கும், நம்பகத் தன்மையற்ற செய்திகளுக்குமே, ஊடகங்கள் முன்னுரிமை கொடுக்கின்றன'' இவ்வாறு யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியை வசந்தி அரசரத்தினம் தெரிவித்துள்ளார். யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் இறுவெட்டு மற்றும் பத்திரிகை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே உப வேந்தர் இவ்வாறு கூறினார்.**

**மேலும் அங்கு பேசிய உப வேந்தர், ''இந்த நிலை மாற வேண்டும். உண்மையை உண்மை என உரத்துக் கூற வேண்டும். சமூகத்தை சரியான வழியில் வழி நடாத்த, ஊடகவியலாளர்கள் சரியான முறையில் செயற்பட வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார்.**

**யாழ் பல்கலைக்கழக உப வேந்தர் கூறியது போன்ற கருத்துக்களை, சில நாட்களுக்கு முன்னர் யாழ் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரும், யாழ் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணமும் கூடக் கூறினர் என்பது குறிப்பிடத்தக்கது.**

**யாழ்ப்பாண சமூகத்தின் முக்கிய பொறுப்புகளை வகிக்கும் இந்த மூன்று பெண்களும் ஊடகங்கள் பற்றி விசனம் தெரிவிக்கையில் மனதில் கொண்டிருந்தது, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருவதும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமானதுமான ஒரு தினசரி, தொடர்ந்து செய்து வரும் உண்மைக்குப் புறம்பான அவதூறுச் செய்திகளையே எனப் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.**

**- யாழ்ப்பாணத்தான்**

'மாமேதைக்குரிய தெளிவுடனும் அறிவுத் திறனுடனும் 'கம்யூனிஸ்ட் அறிக்கை' புத்துலகக் கருத்தை, சமுதாய வாழ்க்கையை முற்றும் தழுவிய பொருள்முதல்வாதத்தை, விரிவான ஆழ்ந்த வளர்ச்சிக் கருதுகோளான இயங்கியலை, புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் பாத்திரத்தை எடுத்துக்கூறுகிறது. சிறு நூல்தான் என்றாலும், பல பெரிய நூல்களுக்கு ஒப்பானது 'கம்யூனிஸ்ட் அறிக்கை'. இன்றுவரையில், அதன் கருத்துகள் நாகரிக உலகில் ஒன்று திரண்டு போராடும் தெழிலாளி வர்க்கத்துக்கு உந்து சக்தியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்கிறது.'

**— 'கம்யூனிஸ்ட் அறிக்கை' பற்றி லெனின்**

# உள்ளூராட்சி சபைகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாற்றமெடுக்கும் சீர்கேடுகள்!



வலிகாமம் வடக்கில், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியைச் சேர்ந்த 9 சபைகள் உட்பட 67 உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் 2011 ஜூலை 23ம் திகதி நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் வடக்கில் ஆளும்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் நேரடி மோதல் நிலவுகின்றது. முன்னர் நடைபெற்ற தேர்தல்களில் அதிக சபைகளைக் கைப்பற்றிய தமிழ் கூட்டமைப்பு, வரப்போகும் தேர்தலிலும் அதிக சபைகளைக் கைப்பற்றலாம் என்ற கனவுடன், அரசுக்கும் - குறிப்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் எதிராக சேற்றை வாரியிறைத்துப் பிரச்சாரம் செய்து வருகிறது. தமிழ் கட்சிகளின் அரங்கத்திலிருந்து ஆனந்தசங்கரி, சித்தார்த்தன், சிவாஜிலிங்கம் போன்றோரின் கட்சிகளை உடைத்தெடுத்து அதைப் பலவீனப்படுத்திய பின், தாமே தனிக்காட்டு ராஜாக்கள் என்ற நினைப்பில் கூட்டமைப்பு செயல்படுவதை அவதானிக்க முடிகிறது.

ஆனால் இந்தப் பிற்போக்கு தமிழ்த் தலைமைகளின் 60 வருட கால வங்குரோத்து எதிர்ப்பு அரசியலால், மக்கள் விரக்தியும் அவநம்பிக்கையும் கொண்டிருப்பது ஒருபுறமிருக்க, இவர்களிடம் உள்ளூராட்சி சபைகளை ஒப்படைத்தால், இப்பொழுது இருக்கின்ற அற்பசொற்ப வசதிகளும் கூட இல்லாமல் போய்விடுமோ எனவும் அச்சமடைந்துள்ளனர். அதற்கு உதாரணமாக வவுனியா நகரசபையிலும், யாழ்ப்பாண மாநகரசபையிலும் கூட்டமைப்பு உறுப்பினர்களின் சீர்கெடான நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ் மாநகரசபைக்கும் வவுனியா நகரசபைக்கும் ஏககாலத்தில் (2009 ஆகஸ்ட் 8) தேர்தல் நடந்தது. இந்த இரண்டு வருடங்களில் யாழ் மாநகரசபையைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர்களின் பல்வேறு தடைகள், சீர்குலைவு செயல்களையும் தாண்டி பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. ஆனால் வவுனியா நகரசபையைக் கைப்பற்றிய தமிழ் கூட்டமைப்பு இன்றுவரை எவ்வித செயற்பாடுகளும் இன்றி சீர்கேடுகளில் மூழ்கிக்கிடக்கிறது.

வவுனியா நகரசபையின் தலைவராக கூட்டமைப்பால் நியமிக்கப்பட்ட நாதனின் செயலற்ற தன்மை, நிர்வாகச் சீர்கேடு என்பன காரணமாக அவர் தனது சொந்தக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவை இழந்து, இறுதியில் பதவியைத் துறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அதன்பின் புதிய தலைவர் ஒருவரை நியமிக்க கூட்டமைப்புக்கு 3 மாதங்கள் வரை பிடித்தது.

இப்பொழுது இந்நகரசபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஜி.ரி.லிங்கநாதன் தனது உறுப்பினர் பதவியை துறக்கப் போவதாக அறிவித்துள்ளார். அதற்கு அவர் சொன்ன காரணம், தன்னை தெரிவுசெய்த மக்கள் சபையின் செயலற்ற தன்மை குறித்து கேள்வி எழுப்பி வருவதால், தன்னால் அதற்கு பதில் சொல்ல முடியாத நிலையில் இந்த முடிவுக்கு வந்ததாக. இவ்வளவுக்கும் தற்பொழுது கூட்டமைப்புடன் கூட்டுச்சேர்ந்து தேர்தலில் போட்டியிடும் பளொட் அமைப்பின் மூத்த உறுப்பினர்களில் ஜிரிலிங்கநாதன் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமாத்திரமல்லாமல், லிங்கநாதன் முன்பு வவுனியா நகரசபையின் தலைவராகப் பதவி வகித்த காலத்தில், அந்நகரத்தில் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது ஒருபுறமிருக்க, யாழ் மாநகரசபையில் எதிர்க்கட்சித் தலைவராக கூட்டமைப்பால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி ரெமீடியஸ் தனது கட்சி உறுப்பினர்களாலேயே மதிக்கப்படாமலும், கோஸ்டிச் சண்டை காரணமாகவும், ஆளும் அணியுடன் சில விடயங்களில் ஒத்துழைக்க ஆரம்பித்துள்ளார். கூட்டமைப்புத் தலைமை சமரச முயற்சிகளில் ஈடுபட்டும் பயனளிக்கவில்லை.

இந்த இரண்டு சபைகளிலும் தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர்கள் செயற்படும் விதம் 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல இருக்கின்றது. எனவே நடைபெறப்போகின்ற உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதால் என்ன நடைபெறும் என்பதை, இந்த இரு சபைகளிலும் அவர்கள் நடந்து கொள்ளும் முறையை வைத்து மக்கள் சிந்தித்து வாக்களிப்பது அவசியம். கூட்டமைப்புக்கு வாக்களிப்பதால், தமது தலையில் தாமே மண் அள்ளிப்போடும் நிலையைத் தவிர்க்க வேண்டும்.

**– சத்தியசீலன் (சாவகச்சேரி)**

# வித்தியாசமான ஒரு 'மாவீரர் தினம்'

'வெருகல் படுகொலை'யின் 7வது நினைவு தினம், அண்மையில் வெருகல் கதிரவெளி மலையடிவாரத்தில் மிகவும் உணர்ச்சிபூர்வமாகக் நினைவுகூரப்பட்டது. இந்நிகழ்வை ஒட்டிக் கட்டப்பட்டிருந்த பதாதையில் ''வெருகல் படுகொலை மாவீரர்களின் 7ம் ஆண்டு நினைவஞ்சலி'' என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. மிகவும் சோகமயமாக நடைபெற்ற இந்த வைபவத்தில், தங்களின் உறவுகளை பிரபாகரனின் புலி பாசிசவாதிகளிடம் பறிகொடுத்த சுமார் 1000 வரையிலான பொதுமக்களும், கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட பல மாகாணசபை உறுப்பினர்கள், வெருகல் பிரதேசசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த வெருகல் படுகொலைகள் 2004 ஏப்ரல் 9ம் திகதி புலித் தலைமையால், தமது சக போராளிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். தமது இயக்கத்தை விட்டு விலகிச் சென்ற கருணா அம்மான், பிள்ளையான் போன்ற கிழக்கு மாகாணத் தலைவர்களுக்கு விசுவாசமாக இருந்த சுமார் 520 கிழக்கைச் சேர்ந்த போராளிகளை, பிரபாகரனுக்கு விசுவாசமான வடக்குப் புலிகள் வெருகல் ஆற்றைக் கடந்து வந்து, துடிக்கப் பதைக்க படுகொலை செய்து இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்த சம்பவமே இந்த வெருகல் படுகொலையாகும். அவர்களில் இருந்த சுமார் 200 வரையிலான பெண் போராளிகளை (பெரும்பாலும் பதின்ம வயதுச் சிறுமியர்) கதறக்கதற பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தி விட்டே, பிரபாகரனின் துப்பாக்கிப் பிசாசுகள் அந்தப் பிஞ்சுகளைச் சுட்டுப் பொசுக்கினர்.

அந்த துயர சம்பவத்தை நினைவு கூர்ந்தே இந்த வித்தியாசமான 'மாவீரர் தினம்' வெருகலில் அனுஸ்டிக்கப்பட்டது. சரியாக மாலை 6.01க்கு படுகொலை செய்யப்பட்ட போராளிகளை நினைவு கூர்ந்து சுடர்கள் ஏற்றப்பட்டன. கொலை செய்யப்பட்டவர்களின் பெற்றோர்களும் உறவினர்களும் அழுது புலம்பினர். சிலர் துயரம் தாளாது மயக்கமுற்று வீழுந்தனர்.

சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, உணர்ச்சிபூர்வமான பாடல்கள், கவிதைகள் என்பனவும் ஒலிபரப்பப்பட்டன. இந்நிகழ்வில் தமிழ் மக்கள் மட்டுமின்றி, புலிகளின் கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பல முஸ்லீம் மக்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

**– எஸ்.ஏ.எம்.ஜுனைட் – ஓட்டமாவடி**

பூர்ஷ்வா வர்க்கம், தனக்கு மரணம் நேர்விக்கும் படைக்கலன்களை வார்த்தெடுத்ததோடு மட்டுமின்றி, அந்தப் படைக்கலன்களைக் கையாளும் ஆள்களையும் உதித்தெழச் செய்துள்ளது. அதாவது, நவீனத் தொழிலாளி வர்க்கம் மூலதனம் வளர்ச்சி அடைந்த அதே அளவுக்கு பாட்டாளி வர்க்கமும் அளவில் வளர்ந்துள்ளது. வேலை கிடைக்கும்வரை இவர்கள் வாழ்கிறார்கள். உழைப்பால் மூலதனத்தைப் பெருக்கும் வரைதான் இவர்களுக்கு வேலை அளிக்கப்படுகிறது. இவர்களும் ஒரு பண்டமே. இதன் விளைவாக, போட்டியின் நிலைமாற்றங்களால், சந்தைகளில் ஏற்படும் ஊசலாட்டங்களால் இவர்கள் துன்பப்படுகிறார்கள்.

தொழிலாளி என்பவன் உண்மையில் ஒரு பண்டமே என்னும் வாக்கியம் அதிர்ச்சியூட்டுவதாகவும் உண்மை நிலையைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்துள்ளது. இயந்திரங்கள் ஆளும் காலகட்டத்தில் தொழிலாளி இயந்திரத்தின் துணை உறுப்பாக மாறிவிடுகிறான். அவனுக்கும் இயந்திரத்துக்கும் எந்தவித வேறுபாடும் இல்லை. அவனிடம் இருந்து தேவைப்படுவதெல்லாம் மிக எளிய, மிகச் சலிப்பூட்டும் மிகச் சுலபத்தில் கிட்டும் தனிப் பயிற்சி திறமை மட்டுமே.

**– கம்யூனிஸ்ட் அறிக்கை**

# தகவல் திரை

## மாலை தீவுகள்

**அமைவிடம்**

- இந்து சமுத்திரத்தில் இந்தியாவுக்கு தென்மேற்காக 400 மைல் தொலைவில் அமைந்துள்ளது

**பரப்பளவு**

- ஈக்குவேட்டருக்கு குறுக்காக வடக்கு தெற்காக 510 மைல்கள் தூரத்துக்கு 1190 சிறிய தீவுகளைக் கொண்டது. 200 தீவுகளில் மட்டும் மக்கள் வாழ்கின்றனர்.

**சனத்தொகை**

- 359,008 பேர். (2006 ஜூலை கணக்கெடுப்பின்படி)

**தலைநகரம்**

- மாலை (MALE) – சனத்தொகை 81,600

**பேசப்படும் மொழி**

- Maldivian Dhivehi

**இனக்குழுக்கள்**

- தென்னிந்தியர்கள், சிங்களவர்கள், அராபியர்கள்

**மதம்**

- 100 வீதம் சுன்னி முஸ்லீம்

**படிப்பறிவு வீதம்**

- 97.2 வீதம்

**அரசமைப்பு**

- குடியரசு

**நாட்டினதும் அரசினதும் தலைவர்**

- ஜனாதிபதி

**சுதந்திர தினம்**

- 1965 ஜூலை மாதம் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றது.

**பிரதான உற்பத்திப் பொருட்கள்**

- மீனும் அதனுடன் சார்ந்த தொழில்களும், தென்னை, ஆடைத்தயாரிப்பு, பாய்கள், கைவினைப் பொருட்கள், பவளப்பாறைகள், சுற்றுலாத்துறை, கப்பற்துறை, படகு கட்டுதல்.

**நாணயம்**

- Rufiyaa ($1 U.S. = 12.8 Rufiyaa)

# யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு குடிநீர், மின்சாரம், சுகாதார வசதிகளை வழங்க திட்டங்கள்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான குடிநீர் மற்றும் சுகாதாரக் கட்டமைப்பு வசதிகளை செய்து முடிப்பதற்காக அரசாங்கம் 164 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் என்பன வழங்கவுள்ளன.

2017ம் ஆண்டில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படும் இந்தத் திட்டம் அமுலுக்கு வந்ததும், அதன் மூலம் இந்த இரு மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் 3 லட்சம் மக்கள் பயன் அடைவர் எனத் தெரிய வருகிறது.

அதேநேரத்தில், மாவட்டத்தின் பல்துறைத் துரித வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டு, கிளிநொச்சி மாவட்டம் முழுமைக்கும் லக்சபான மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை, இலங்கை மின்சாரசபை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## *ஜோர்ஜ் இ. குருஷ்சேவின்*

(நாடகம்)

**“Killலி குனியம்”**

| | |
|---|---|
| இடம்: | York Wood Library Theatre<br>1785 Finch Av. West<br>Toronto – Ont<br>M3N 1M6 |
| திகதி: | August 6, 2011 |
| நேரம்: | மாலை 6 மணி |
| தொடர்புகளுக்கு: | thayagamcanada@yahoo.com<br>Matrathu@hotmail.com |

முன்பக்கத்தொடர்ச்சி…

இந்த நிலைமையில், அரசாங்கம் என்னதான் செய்யப் போகின்றது? இந்தியாவின் அழுத்தங்களாலோ அல்லது சர்தேச சமூகத்தின் வேண்டுதலாலோ தீர்வுகாண வேண்டிய பிரச்சினையா இது? இனப்பிரச்சினை என்பது இலங்கையின் சொந்த உள்நாட்டுப் பிரச்சினை. தனது சொந்த மக்களில் ஒரு பிரிவினரின் தேசிய – ஜனநாயக உரிமைகள் சம்பந்தமான பிரச்சினை. கடந்த காலங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்களால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் தட்டிக் கழிக்கப்பட்டதாலும், சில சந்தர்ப்பங்களில் சில தீர்வுகள் முன்வைக்கப்பட்ட போது, அதைச் சந்தர்ப்பவாதமும் சுயநலமும் கொண்ட தமிழ் அரசியல் கட்சிகள் குழப்பியடித்ததாலுமே, இந்தப் பிரச்சினை விசுவரூபம் எடுத்து உள்நாட்டுப் போராக மாறியது.

30 வருடப்போர் தமிழ் மக்களின் வாழ்வை மட்டுமல்ல, முழு நாட்டையுமே தீயில் பொசுக்கியது. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இந்தச் சின்னஞ்சிறிய தேசம் மிகப்பெரிய விலையைக் கொடுக்க நேர்ந்தது. இன்று போர் முடிவுற்றுவிட்டாலும், அதைத் தோற்றுவித்த இனப்பிரச்சினை தீர்ந்தபாடாகவில்லை. இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தி மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளும், தென்னிந்தியாவிலுள்ள விஸ்தரிப்புவாத சக்திகளும் இலங்கையில் மீண்டும் குழப்பங்களை உருவாக்க முயன்று வருகின்றன.

முன்னைய அரசுகளால் தீர்க்கப்பட முடியாமல் இருந்த கொடிய போரை, மகிந்த ராஜபக்ச அரசு ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதில், சிங்கள மக்கள் மட்டுமின்றி, நாட்டுப்பற்றுள்ள தமிழ் மக்களும் அளப்பரிய பங்கைச் செலுத்தியுள்ளனர். அதற்காக புலிப் பாசிசவாதிகளால் அவர்கள் பல துன்பங்களையும் அனுபவித்தனர். இவ்வளவும் நடந்த பின்னர், அந்த மக்களின் உரிமைகளை வழங்குவதில் அரசு தயக்கம் காட்டி வருவது கொஞ்சமும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

முன்னைய காலங்களில் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக எட்டப்பட்ட தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதில், அரசுகளுக்கு போதிய பாராளுமன்றப் பலம் இல்லையென்ற பிரச்சினை இருந்தது. ஆனால் இப்போதைய அரசுக்கு எதையும் செய்யக்கூடிய மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் பாராளுமன்றத்தில் உள்ளது. அந்தப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி அரசு தனக்குத் தேவையான பல சட்டமூலங்களைக் கடந்தகாலத்தில் நிறைவேற்றியும் உள்ளது. ஆனால் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் மட்டும் அதைப் பிரயோகிக்க அரசு தயங்குவது, அரசுக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் விருப்பமில்லையோ என்ற நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

தமிழ் மக்கள் இப்பொழுது தனிநாட்டைக் கோரவில்லை. சமஸ்டியைக் கோரவில்லை. ஐம்பதுக்கு ஐம்பது கோரவில்லை. குறைந்தபட்சத் தீர்வான 13வது திருத்தச் சட்டத்தையாவது அமுல்படுத்தும்படிதான் அரசைக் கோருகின்றனர். அதையும்கூட இலங்கை அரசு செய்யத் தயாரில்லையென்றால், வரலாறு திரும்பவும் பழைய தடத்துக்குத் திரும்பாது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை.

*

# *ஐக்கிய நாடுகளின் 193வது உறுப்பு நாடாக தெற்கு சூடான்*

*ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தனது 193வது உறுப்பு நாடாக தெற்கு சூடானை அதிகாரபூர்வமாக இணைத்தது. 2006 ஆம் ஆண்டில் மொண்டினேகிரோ (Montenegro) புதிய நாடாக இணைந்த பின்னர் புதிய நாடொன்று இணைவது இதுவே முதற்தடவை ஆகும். இந்நாள் "வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், மகிழ்ச்சியானதும்" என பொதுச் சபையின் தலைவர் யோசப் டீஸ் தெரிவித்தார். வாக்கெடுப்பு எவ்வித எதிர்ப்பும் இன்றி நிறைவேறியது.*

*"நல்வரவு, நாடுகளின் கூட்டமைப்புக்கு தெற்கு சூடானை வரவேற்கிறோம்," என ஐநா பொதுச் செயலர் பான் கி மூன் தெரிவித்தார்.*

*முன்னதாக ஐநாவின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தெற்கு சூடானை ஐநாவில் இணைவதற்கான பிரேரணை முன்வைக்கப்பட்டு முழுமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2011 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற பொதுசன வாக்கெடுப்பை அடுத்து 08.07.2011 அன்று தெற்கு சூடான் ஒன்றுபட்ட சூடானிடம் இருந்து விடுதலை பெற்றது. தனது புதிய நாணயத்தையும் தெற்கு சூடான் வெளியிடவுள்ளது. அந்த நாணயம் தெற்கு சூடான் பவுண்ட் என அழைக்கப்படும்*

*பெரும் எண்ணெய் வளம் கொண்டுள்ள நாடாக இருந்த போதிலும், தெற்கு சூடான் உலகின் மிகக்குறைந்தளவு அபிவிருத்தி அடைந்த நாடாகக் கருதப்படுகிறது. இந்நாட்டில் உள்ள பெண்களில் 16 விழுக்காட்டினரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். ஒழுங்காக வடிவமைக்கப்பட்ட போக்குவரத்துப் பாதைகள் மிகக் குறைந்தளவே காணப்படுகின்றன.*

✱ ✱ தனிச்சுற்றுக்கு மட்டும் - Private Circulation only ✱ ✱

## கனடிய அரசின் எதிர்நிலைப்பாடு!

✷ இரு சர்வதேச விவகாரங்கள் சம்பந்தமாக கனடாவின் கொன்சவேர்டிக் கட்சி அரசாங்கம் எடுத்துள்ள நிலைப்பாடு, கனடாவிலும் உலகெங்கிலும் பரந்து வாழும் ஜனநாயக – முற்போக்கு சக்திகளை விசனமடைய வைத்துள்ளது.

ஒன்று, இவ்வருடம் செப்ரெம்பரில் ஐ.நா.பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் போது, பாலஸ்தீனத்தை ஒரு சுதந்திர அங்கத்துவ நாடாக எற்றுக்கொள்ள வைப்பதற்கு, பாலஸ்தீன அதிகாரசபை எடுத்து வரும் முயற்சிகளை பிரதமர் ஸ்ரீபன் காபரின் கனடிய அரசு நிராகரித்துள்ளது. கொன்சவேடிக் கட்சி அரசு, தொடர்ச்சியாக பாலஸ்தீனத்துக்கு எதிராக ஆக்கிரமிப்பு, அழித்தொழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் சியோனிச இஸ்ரேலையே எப்பொழுதும் ஆதரித்து நிற்கின்றது.

இரண்டாவதாக, இன்னும் சில வாரங்களில் ஐ.நாவின் ஆயுதப் பரிகரண மாநாடு நடைபெறவுள்ளது. 65 நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பு ஜெனீவாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. அகர வரிசையின்படி ஒவ்வொரு மாநாட்டுக்கும் ஒவ்வொரு நாடு தலைமைதாங்க வாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது. அதன்படி அடுத்த மாநாட்டுக்குத் தலைமைதாங்கும் வாய்ப்பு சோசலிச வட கொரியாவுக்குக் கிடைத்துள்ளது.

வட கொரியாவுக்கு அந்த மாநாட்டுக்குத் தலைமைதாங்கும் தகுதி இல்லையெனக் கூறி, அந்த மாநாட்டை தான் பகிஸ்கரிக்கப் போவதாக கனடிய அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்துடன் ஈரானுக்கும் இத்தகைய மாநாட்டுக்குத் தலைமைதாங்கும் தகுதி கிடையாது எனவும் கனடிய அரசு தெரிவித்துள்ளது. ஏகாதிபத்திய நாடுகள் அளவு கணக்கில்லாமல் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து வைத்திருப்பது பற்றி அலட்டிக் கொள்ளாத கனடா போன்ற மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகள், ஏகாதிபத்திய அச்சுறுத்துலக்கு எதிராகத் தற்காப்பு நோக்கில் வட கொரியா, ஈரான் போன்ற நாடுகள் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டால், அவற்றைத் தண்டிக்கும் வகையில் செயல்படுவது, என்ன வகை நியாயமோ அல்லது ஜனநாயகமோ தெரியவில்லை? ✷

## காங்கேசன் துறைமுகம் துரித அபிவிருத்தி

✷காங்கேசன்துறையிலுள்ள துறைமுகத்தை, இந்திய நிதியுதவியுடன் 2 வருடங்களில் எல்லா வசதிகளும் கொண்ட பிராந்தியத் துறைமுகமாக மாற்றியமைக்கும் பணிகளை, இலங்கை அரசாங்கம் துரிதமாக மேற்கொண்டு வருகிறது. இதற்கு இந்திய உதவியாக 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளதுடன், கடன் அடிப்படையிலும் மேலும் உதவிகளை வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

இந்தத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்ட பின்னர், இந்தியாவிலிருந்து நேரடியாக வடக்கு கிழக்கு மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்கள், சீமெந்து, உர வகைகள் என்பனவற்றை துரிதமாகவும், குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள வழி பிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் யாழ்ப்பாண விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் விவசாய விளைபொருட்களான வெங்காயம், மிளகாய், புகையிலை, உருளைக்கிழங்கு, மரக்கறி வகைகள் மற்றும் பனை சார்ந்த கைவினைப் பொருட்கள் என்பன இந்தத் துறைமுகத்தினூடாக கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, திரிகோணமலை ஆகிய பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்கான வசதிகளும் செய்யப்படும்.

அதேவேளையில், இந்தத் துறைமுகத்தைத் தற்போது பயன்படுத்தி வரும் இலங்கைக் கடற்படை தொடர்ந்தும் அதைப் பயன்படுத்தும். ✷

## உங்கள் கேள்வி நியாயமற்றது – துக்ளக்

கேள்வி தொடுத்தவர் : சிவமைந்தன், சீர்காழி

கேள்வி : தாங்கள் ஒரு தமிழன் என்றோ, ஒரு தமிழ்ப் பத்திரிகையாளன் என்றோ இல்லாவிட்டாலும், ஒரு மனிதன் என்ற பார்வையில் கூட, இலங்கைத் தமிழர்களின் துன்ப நிலையைப் பற்றி தங்கள் பத்திரிகையில் எழுத மறுக்கிறீர்களே, ஏன்?

பதில் : 3ம் பக்கம் பார்க்க....